# 'சிங்கிலிஷ்' பேசுவது தனிப்பட்ட தேசிய அடையாள உணர்வைத் தருகிறது: ஆய்வு

***Mediacorp Seithi,*** 15 June 2020

சிங்கப்பூர்வாசிகளில் 50 விழுக்காட்டினர், சிங்கிலிஷ் பேசுவதால் தேசத்துடன் தங்களை அடையாளப்படுத்திக்கொள்ள முடிவதாகத் தெரிவித்துள்ளனர்.

கொள்கை ஆய்வுக் கழகம் நடத்திய ஆய்வில் அது தெரியவந்துள்ளது.

மொழிப் பயன்பாடு, மொழி வளம், சமூகப் பிணைப்பு ஆகியவை தொடர்பில், 4 இனத்தைச் சேர்ந்த சுமார் 4,000 சிங்கப்பூர்வாசிகளிடம் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது.

அவர்களில் 45 விழுக்காட்டினர், சிங்கிலிஷ் பேசுவது உள்ளூர்க் கலாசாரத்தின் முக்கிய அம்சங்களில் ஒன்று எனக் குறிப்பிட்டனர்.

மேலும் காலப்போக்கில் அது அழிந்துவிடாமல் இருக்கவேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

2013ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வுடன் ஒப்பிடும்போது, 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்,பெரியவர்களைவிட சரளமாக சிங்கிலிஷ் பேசுவது கண்டறியப்பட்டது.

கல்விச் சூழல், அதிகாரத்துவ நிகழ்வுகள் ஆகியவற்றைத் தவிர்த்து, இதர நேரங்களில் சிங்கிலிஷ் பேசுவது தவறல்ல என்று பெரும்பான்மையினர் கருதுகின்றனர்.